என்ற நோக்கத்தின் அடிப்படையில் மேலும் இரண்டு இடங்களுக்கு, மதுரைக்கும், கோயம்பத்தூருக்கும் விரிவுபடுத்த முயற்சி மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. ஆராய்ச்சி, செயல்முறைத் திட்டம் (ரிசர்ச் அண்டு டெமான்ஸ்டிரேஷன்)-க்காக, அமெரிக்க சுகாதார, கல்வி நல்வாழ்வுத் துறையின் மறுவாழ்வு அளிக்கும் பிரிவு உதவி அளிக்க முன்வந்திருக்கிறது. Vocational Rehabilitation Administration of the Department of Health Education and Welfare of U.S.A. முன்வந்திருக்கிறார்கள். இந்த அடிப்படையில் தான் மதுரை, கோயம்பத்தூர் ஆகிய இரண்டு இடங்களிலும் துணை மருத்துவ இயற்கை உறுப்புநிலையம் ஏற்படுத்துவதன் மூலம் தென் மாவட்டங்கள், மேற்கு மாவட்டங்களில் இருப்பவர்களுக்கு உதவியாக அமையும் என்ற கருத்தின் அடிப்படையில், அதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. அதற்கான முயற்சி இப்பொழுது மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : பாளையங்கோட்டை மருத்துவ நிலையம் இப்பொழுது வளர்ந்துவருகிற நிலையில் இருக்கிறது. இப்படிப்பட்ட சிறப்புப் பிரிவுகளை பாளையங்கோட்டை மருத்துவமனையில் துவக்குவதன் மூலம், அந்த முறை வளர்வதற்கும், இந்தத் துறையில் பலர் பாண்டித்தியம் பெறுவதற்கும் வசதியாக இருக்கும். ஆகவே, பாளையங்கோட்டையில் இத்தகைய பிரிவை நிறுவுவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்பொழுது மதுரை, கோவை ஆகிய இரண்டு இடங்களில் நிறைவேற்றுவதற்கான முயற்சி மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. அடுத்த முயற்சி தஞ்சாவூரில் மேற்கொள்ளப்பட இருக்கிறது. அடுத்த முயற்சியில் தான் திருநெல்வேலிக்குப் போகவேண்டும்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : 395, 396 எண்ணுள்ள கேள்விகள் பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

Polyester fibre factory

* 397 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether licence for starting a polyester fibre plant has been granted to the private sector near Madras City; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) சென்னையில் பத்து கோடி ரூபாய் மூலதனத்துடன் ஆண்டொன்றுக்கு 6,100 மெட்ரிக் டன் பாலிஸ்டர் இழை Polyster fibre உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று நிறுவுவதற்காக பம்பாயைச் சேர்ந்த தி இண்டியன் ஆர்கானிக் கெமிக்கல்ஸ் லிமிடெட் என்ற தனியார் நிறுவனம் ஒன்றிற்கு மத்திய அரசு பூர்வாங்க அனுமதி அளித்துள்ளது. மணலியில் அரசாங்கம் நில ஆர்ஜிதம் செய்திருக்கின்ற பகுதியில் 205 ஏக்கர் பரப்பளவு உள்ள நிலத்தைத் தொழிற்காலையை நிறுவுவதற்கேற்ற இடமாக அந்த நிறுவனம் தேர்ந்தெடுத்திருக்கிறது அரசாங்கம் அந்த இடத்தை அந்த நிறுவனத்திற்குக் கொடுத்து விடுவதென்று முடிவு செய்திருக்கிறது. நிலத்தை நிறுவனத்திடம் ஒப்படைக்கும் வேலை விரைவில் முடிவடையும்.